2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) வேலூர் நாடாளுமன்றத் தொகுதிக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அம்மாவட்டத்திற்கான புதிய அறிவிப்புகளை வெளியிடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு* mini budget*–ஐப் படித்திருக்கிறார்கள். பரவாயில்லை. ஆனால், எனக்கு ஒரு சந்தேகம், இவ்வளவு அரிய பெரிய திட்டங்கள் எல்லாம்* Standing Finance Committee*–ல் எப்படி விட்டார்கள் என்று தெரியவில்லை. இதற்குப் பிறகு எப்படி வந்தது என்று தெரியவில்லை. இதற்குப் பிறகு,* finance *எப்படி வரும் என்பது ஒரு பிரச்சினை. அது பற்றியெல்லாம் நான் பெரியதாக எடுத்துக்கொள்ளவில்லை. இவ்வளவு பெரிய திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு அறிவிக்கிறீர்கள். இதிலே எங்களுடைய மாவட்டத்திற்கும் இந்தத் திட்டங்கள் வரும் அல்லவா? இப்போது* Code of Conduct *என்னவாகிறது?* Code of Conduct *இருக்கின்றது அல்லவா? இப்போது நீங்கள் எப்படி அறிவிக்கலாம்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய மாவட்டத்தைச் சேர்க்கவில்லை.* Code of Conduct *இருப்பதனால் உங்களுடைய மாவட்டத்தில் சிலவற்றை எடுத்துவிட்டோம். நேற்று இருந்தது. நீங்கள் அதை ஏற்கெனவே ஞாபகப்படுத்தியிருந்தீர்கள். அதனால், அறிவிப்பில் இடம்பெற்றிருந்ததை நாங்கள் எடுத்துவிட்டோம்.*

திரு. துரைமுருகன்: *அப்படியென்றால் தேர்தலுக்குப் பிறகு தனியாக ஒரு முறை அறிவிப்பீர்களா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், தன்னுடைய மாவட்டத்தில் இருக்கிற அக்கறையின்*

2019 ஜூலை 8] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

காரணமாக, தங்களுடைய மாவட்டத்தில் எந்தத் திட்டமும் அறிவிக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தைச் சொல்கின்ற விதமாகச் சொல்லியிருக்கின்றார்கள். அங்கே நாடாளுமன்றத் தேர்தல் அறிவித்த காரணத்தினாலே, Code of Conduct *இருப்பதால், புதிய அறிவிப்புகள் எதுவும் வெளியிட முடியாது. அவர்கள் ஏற்கெனவே புதிய அறிவிப்புகள் வெளியிட்டதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு மின் துறை அமைச்சரின் மானியக் கோரிக்கையில் அவருடைய அறிவிப்பிலே ஏற்கெனவே சில அறிவிப்புகள் அச்சடிக்கப்பட்டு விட்டன. அவர்களும் அந்த அறிவிப்பிலே அச்சிடப்பட்டபடி, அப்படியே அறிவித்துவிட்டார். நீங்கள் சொன்னவுடன் அது நீக்கப்பட்டுவிட்டது. ஆகவே, இந்தத் தேர்தல் முடிந்தவுடன் வேலூர் மாவட்டத்திற்கும் தேவையான திட்டங்கள், புதிய அறிவிப்புகள் வெளியிடப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

5. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடித்தலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள செயல்பாடுகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2019

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடித்தலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள செயல்பாடுகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன் பிடித்தலில் ஈடுபடும் தொழிலாளர்கள் மற்றும் அதனைச் சார்ந்துள்ள செயல்பாடுகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.